மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விவரங்கள் தற்சமயம் இல்லை, தனிக்கேள்வி போடவும்.

திரு. கே. சகாதேவக் கவுண்டர் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவாவர்களே, சமூக நலப் பணிபுரியும் ஊழியர்களுக்கு 2 மாதம், 3 மாதங்களாகச் சம்பளம் கொடுக்காமல், அவர்கள் பட்டினி கிடந்து சாவதைப்பற்றி அரசாங்கத்திற்கு தெரியுமா? அதுபற்றி அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனைபேர் செத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பட்டினி கிடந்து சாகக்கூடிய அளவிற்குக் குறைபாடுகள் இருந்தால், சட்டமன்றம் நடக்க முடியாத அளவிற்குக் கேரோ செய்து கொண்டிருப்பார்கள். அதிலிருந்து அப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லை என்றே தெரிகிறது. யாரும் பட்டினி கிடந்து செத்ததாக அதைப்பற்றி புகார்கள் அரசாங்கத்திற்கு வரவில்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது, தமிழகத்திலே இரண்டு, மூன்று மாவட்டங்களில் தான் சோஷியல் ஒர்க்கர்ஸ் இருப்பதாகச் சொன்னார்கள். தீண்டாமை ஒழிப்பின் கீழ் அந்த இரண்டு மூன்று மாவட்டங்களில் மட்டும்தான் வேலை இருக்கிறதா? மற்ற மாவட்டங்களில் இல்லையா? அப்படியானால் மற்ற மாவட்டங்களில் அதை விரிவுபடுத்தத் தாமதம் ஏற்படுவது ஏன்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான், மூன்று மாவட்டங்களில் சம்பளம் கொடுக்கும் அதிகாரத்தை பஞ்சாயத்து யூனியன் களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத்தான் சொன்னேன். மற்ற மாவட்டங் களிலும் சோஷியல் ஒர்க்கர்கள் இருக்கிறார்கள். ஆனால், அரிசன நல இலாக்கா மூலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

படிப்பு உதவித்தொகை வழங்குவதற்கான விதிகள்

* 456 வினா----திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா---

அரிசனநல துறையில் மாணவர்கள் உதவித் தொகை பெறும் வகையில் தற்போது கடைபிடித்து வரும் மதிப்பெண்களை முன்பு இருந்ததைவிட குறைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரிசன நலத்துறை யினரால் உதவித்தொகை வருமானத்தின்பேரில் அளிக்கப்படுகிறது. ஆகையால் மேற்படி வினாவிற்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, முன்பொருசமயம், அமைச்சா வர்கள் இந்த மார்க் விகிதத்தைக் குறைப்பதாக உத்தேசம் இருப்பதாக ஒரு யிடத்தில் பேசியதாகக் கேள்விப்பட்டேன். எனவே, அம்மாதிரி செய்ய உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1970 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்பொழுது நான் பின்தங்கிய மக்கள் நலனுக்காகப் பொறுப்பேற்றிருந்தேன். அப்பொழுது பின்தங்கிய மக்களுக்குத்தான், வருகின்ற எண்கள் மூலம் ஸ்காலர்ஷிப் கொடுக்கலாம் என்று அதற்காகத்தான் சொல்லியிருப்பேனே தவிர, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அல்ல.

திரு. வி. எஸ். எஸ். மணி : தலைவரவர்களே, பின்தங்கிய மாணவர்களின் பெற்றோர்களின் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அரிசன நல இலாக்கா பற்றி இருக்கிறது.

THIRU V.S.S. MANI : Rules for grant of scholarship. என்று போட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் வேறே இருக்கிறார்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆண் மாணவர்களுக்கும், பெண் மாணவர்களுக்கும் ஒரே விதமான ஸகாலர்ஷிப் கொடுக்கப்படுவது உண்மையா? பெண்களுக்கு கொஞ்சம் அதிகப்படியான செலவு இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, ஆண்களைவிட பெண் மாணவர்களுக்கு அதிகப்படியான தொகை கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : உபகாரச்சம்பளம் ட்யூஷன் பீஸ் இவைகளெல்லாம் இருவர்களுக்கும் பொதுவாகத் தான் தரப்படுகிறது. போர்டிங் கிராண்டைப் பொறுத்தவரையில், பள்ளி மாணவர்களில், ஆண்களுக்கு ரூ. 20-ம், பெண்களுக்கு ரூ. 21-ம், பெண்களுக்கு ஒரு ரூபாய் அதிகமாக, சோப்பு, சீப்பு இவைகள் வாங்கிக்கொள்வதற்காக கொடுக்கப்படுகிறது. அதைக் கூட இப்பொழுது சமீபத்தில் ரூ. 2 ஆக உயர்த்தியிருக்கிறோம். ஆண் மாணவர்களுக்கு ரூ. 1 கொடுத்திருக்கிறோம் மாதம் ஒரு முறை கிராப் வெட்டிக்கொள்வதற்காக, பெண் மாணவியர்களுக்கு அதிகப்படியாகத் தருவது நான் ஏற்கனவே சொன்ன அப்படிப்பட்ட செலவுகளுக்காக. எனவே, ஆண்களுக்கு ரூ. 1-ம், பெண்களுக்கு ரூ. 2-ம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது.

Re-organisation of Agriculture Department.

* 457 *Q.*—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to re-organise the Agriculture Department as recommended by the Committee on Estimates (1968–69); and

(*b*) if so, the stage at which the matter stands?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) வேளாண்மைத் துறை இயக்குநர் அரசுக்கு திட்டம் ஒன்றை அனுப்பியுள்ளார். இத் திட்டத்தை மதிப்பீட்டுக்குழு ஆதரித்துள்ளது.

(இ) இது அரசின் ஆராய்வில் உள்ளது.